**SC. No. 51 /2018**

P.W.9 - கவிதா

தேதி: 18.02.2021.

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு சொந்தமாக கார் இல்லை. என் கணவர் சத்தம் போடவில்லை. நான் தான் சுமார் 1/2 மணி நேரம் சத்தம் போட்டேன். சொந்தமாக கார் இல்லை என்பதால் வாடகை காரை தான் கூப்பிட்டோம். அங்கிருந்து கார் ஸ்டாண்ட் 1/2 கி.மீ துாரம் இருக்கும். வாடகை கார் வந்தது. அதன் பின்பு என் கணவர் கார் ஓட்டுனரிடம் வாக்குவாதம் செய்ததால் தாமதம் ஆகிவிட்டது. அதன் பின்பு வாடகை காரை எடுத்துக்கொண்டு ஆற்காடு பைபாஸ் வரை வந்துவிட்டோம். அதன் பின்பு தான் என் மைத்துனர் காரிலிருந்து கீழே விழுந்து இறந்துவிட்டார் என்று கேள்விப்பட்டோம். என்னுடைய மைத்துனர் சிவக்குமார் விபத்தில் இறந்துவிட்டதாக சொல்லி அவருடைய மனைவி இழப்பீடு கோரி வழக்குபோட்டார் என்றால் சரிதான். கார்த்திக் உறவுக்காரர் அல்ல. நாங்கள் முதலில் திருவண்ணாமலையில் குடியிருந்தபோது அங்கு பக்கத்து வீட்டில் கார்த்திக் குடியிருந்ததால் தெரியும். அன்றைய தினம் எங்கள் வீட்டில் லாவண்யாவிற்கு நலங்கு வைக்கும் வைபவம் நடந்தது. நிறைய உறவுக்காரர்கள், நண்பர்கள் என நிறைய கூட்டமாக வந்திருந்தார்கள். என் வீட்டிற்கு வந்திருந்தவர்கள் யாரும் கார் கொண்டு வரவில்லை. எங்கள் வீட்டிற்கு முன் பக்கமும் பின் பக்கமும் நிறைய வீடுகள் மற்றும் கடைகள் உள்ளது என்றால் சரிதான். போலிசார் சொல்லிக்கொடுத்து உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.